செ.வெ.எண்:24 நாள்:11.04.2017

**முதன்மை நிலை விளையாட்டு மைய விடுதிகளில் சிறுவர் / சிறுமியர் சேர்க்கைக்கு**

**விண்ணப்பங்கள் வழங்குதல்**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக பள்ளிகளில் பயிலும் சிறுவர் / சிறுமியர்களுக்கு விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்ப நல்ல பயிற்சி, தங்குமிட வசதி மற்றும் சத்தான உணவுடன் கூடிய 5 முதன்மை நிலை விளையாட்டு மைய விடுதிகள் பின்வரும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன. சிறுவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மைய விடுதி – சென்னை, திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. சிறுமியர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மைய விடுதி –சென்னை மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேற்காணும் முதன்மை நிலை விளையாட்டு மைய விடுதிகளில் உள்ள பின் வரும் காலியாக உள்ள விளையாட்டுகளில் பயிற்சி பெற்று சிறந்த விளையாட்டு வீரர் / வீராங்கணையராக விளங்குவதற்கு 6–ம் வகுப்பு, 7–ம் வகுப்பு, மற்றும் 8–ம் வகுப்பு ஆகிய வகுப்புகளில் சிறுவர் / சிறுமியர்களுக்கான மாவட்ட அளவிலான தேர்வு வரும் 11.05.2017 அன்று காலை 8.00 மணிக்கு ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் நடைபெற உள்ளது. சிறுவர்களுக்கான விளையாட்டு 1. இறகுப்பந்து 2. டேக்வோண்டோ 3. குத்துச்சண்டை 4. ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் 5.டென்னிஸ் சிறுமியர்களுக்கான விளையாட்டு 1. இறகுப்பந்து 2. மேசைப்பந்து 3. ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் 4. நீச்சல் விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வம் உள்ள மாணவ / மாணவியர் 2017–2018 ஆம் ஆண்டு சேர்க்கைக்கு உரிய படிவங்களை 30.03.2017–ஆம் தேதி முதல் அனைத்து மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர்களை அணுகியே அல்லது www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மாநில மற்றும் தேசிய அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் விளையாட்டு விடுதிகள் தொடர்பான விவரங்களை www.sdat.tn.gov.in என்ற இணைய தள முகவரியில் தெரிந்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 11.05.2017 தேர்வு அன்று காலை 8.00 மணிக்குள் நேரில் சமர்ப்பிக்க வேண்டும் என கரூர் மாவட்ட விளையாட்டு அலுவலர் திருமதி தே.சாந்தி அவர்கள் கேட்டுக் கொள்கின்றார்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.